

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 193 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 11 – திங்கள்கிழமை 23 பிப்ரவரி 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 193 : Thiruvalluvar Year - 2057 - Maasi 11 - Monday 23 February 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மதுரை மக்கள் தந்த மாபெரும் வரவேற்பு!



## தி.மு.க.வினர் மீது பா.ஜ.க. அரசு நடத்தும் ரெய்டுகள் – உங்கள் சித்து விளையாட்டுக்கு அஞ்சமாட்டோம்!

# தெற்குச்சீமை மொத்தமும் கழகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும்!

## மதுரையில் தென் மண்டல வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் மாநாட்டில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கழகத்தினரிடம் சூளுரை!

**மதுரை, பிப். 23 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தெற்குச் சீமையில் மொத்த தொகுதிகளிலும் கழகக் கூட்டணிதான் வெற்றி பெற வேண்டும் என்றும், இந்திய அளவில் இருக்கும் எதிர்க்கட்சிகளிலேயே தி.மு.க. வினர் மேல்தான் பா.ஜ.க. அரசு அதிகமான ரெய்டுகள் நடத்துகிறார்கள் எனவும், எமர்ஜென்சியையே பார்த்த இயக்கம் தி.மு.க.! உங்களின் எந்த சித்து விளையாட்டிற்கு நாங்கள் அஞ்சமாட்டோம் என்றும் கழகத்தவரிடையே சூளுரைத்தார்.**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21-02-2026) மதுரையில் நடைபெற்ற கழகத்தின் தென் மண்டல வாக்குச்சா வடிக் குழு உறுப்பினர்களுக்கான ‘என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி’ பயிற்சி மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-**

வீரம் என்றால், மதுரை! பாசம் என்றால், மதுரை! கோயில் என்றால், மதுரை! சாப்பாடு என்றாலும், மதுரை! இங்கு எல்லாமே ஃபேமஸ்! அப்படிப்பட்ட மாமதுரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெற்கு மண்டல BLA2, BLC, BDA வாக்குச்சாவடிக் குழுவினருக்கான ‘என் வாக்குச்சாவடி… வெற்றி வாக்குச்சாவடி’ பயிற்சி மாநாட்டில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமையடைகிறேன், பூரிப்படைகிறேன். இன்னும் சொன்னால் சித்திரை திருவிழா போன்று கூடியிருக்கும் உங்களைப் பார்த்து உற்சாகம் அடைகிறேன்!

### நாளுக்கு நாள் எனக்கு நம்பிக்கை அதிகமாகிறது!

உத்தங்குடி முழுவதும் உடன்பிறப்புகள் குடியேறிவிட்டது போன்று எனக்கு இருக்கிறது! இதையெல்லாம் பார்க்கும் போது என்னுடைய நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. இனி, நாம்தான்! இனி, எப்போதுமே நாம் தான்! இவ்வாறு நம்பிக்கையுடன் நான் இருப்பதற்கு காரணமே, கழகத்தின் வேர்களாக இருக்கும் நீங்கள்தான்!

### மூர்த்தி என்றாலே பிரம்மாண்டம்தான்!

இந்தப் பயிற்சி மாநாட்டை மிக எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு



அமைச்சர் - ஆற்றல்மிகு மாவட்டச் செயலாளர் மூர்த்தி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! மூர்த்திக்கு ஒரு பழக்கம் உண்டு! எதையும் சிறியதாகச் செய்யத் தெரியாது! அனைத்தும் பிரமாண்டம்தான்! அவரின் துறையின் மூலம் வருவாயைப் பெருக்கி ஆட்சிக்கு பலம் சேர்த்ததைப் போன்று, இன்று, இந்தப் பிரமாண்ட மாநாட்டை நடத்தி, தேர்தல் பணிக்கும் பலம் சேர்த்திருக்கிறார்! அவருக்கும், அவருக்கு தோளோடு தோள் நின்று பணியாற்றியிருக்கும் அனைத்து நிர்வாகிகளுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில், என்னுடைய வாழ்த்துகளுடன், என்னுடைய நன்றிகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

“என் வாக்குச்சாவடி… வெற்றி வாக்குச்சாவடி” என்ற மாநாட்டிற்கு அடித்தளமான BLA2, BLC, BDA ஆகியோரை நியமிக்கும் பணிகளை, கடந்த நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்பே நாம் தொடங்கிவிட்டோம்! நாடாளுமன்றத் தேர்தலின்போது, தேர்தலுக்கான களப்பணியில் முன்னால் நிற்கும் BLA2க்களுக்கான மாபெரும் பயிற்சிக் கூட்டங்களை மண்டல வாரியாக நானே சென்று நடத்தினேன். அதனால்தான், நாடாளுமன்றத் தேர்தலில், நாற்பதுக்கு நாற்பது என்று வெற்றி பெற்றோம்!

அதன்பிறகு, கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்க்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் மாபெரும் முன்னெடுப்பைத் தொடங்கி, இந்தியாவில் வேறு எந்தக் கட்சியும் செய்ய முடியாத வகையில் ‘செயலி’ மூலமாக இங்கு வந்திருக்கும் BDA உதவியுடன் வீடு வீடாகச் சென்று, கிட்டத்தட்ட ஒரு கோடியே 10 லட்சம் குடும்பங்களை அதில் உறுப்பினர்களாக இணைத்தோம்.

அடுத்த பணி உடனே வந்தது. அது தான், S.I.R. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் யாருடைய வாக்குகளையும் நீக்க விடாமல் பம்பரமாக உழைத்த இயக்கம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

### வருகிற தேர்தலில் நமது வெற்றியை உறுதி செய்வது நீங்கள்தான்!

இவ்வாறு கேட்பே இல்லாமல் - இடைவெளியே இல்லாமல், அடுத்து உடனடியாக தேர்தலுக்குத் தயாராக, BLA2க்களுடன் சேர்த்து, BLC, BDAக்களையும் இப்போது சந்தித்துக் கொண்டு இருக்கிறேன். இப்போது இருக்கும் வாக்குச்சாவடிகளின் அடிப்படையில், உங்களைப் போன்ற BLAக்களின் மொத்த எண்ணிக்கை, 75 ஆயிரத்து 32 பேர்! தமிழ்நாடு முழுவதும் BLCக்கள் எவ்வளவு தெரியுமா? ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்! BDAக்களை எடுத்துக் கொண்டால், 75 ஆயிரத்து 32 பேர்! வரும் தேர்தல் களத்தில் நம்முடைய வெற்றியை உறுதி செய்யப் போவது, இந்த 7 லட்சம் பேர் தான். அதனால்தான் இன்றைக்கு வேர்களாக பரவியிருக்கும் உங்கள் அனைவரையும் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். மண்டல வாரியான மாநாடுகள் நடத்தத் திட்டமிடப்பட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கான மாநாட்டை, சென்னைக்கு அருகில் இருக்கும் மாமல்லபுரம் செல்லும் வழியில் இருக்கும் திருவிடந்தையில்

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்



## வெல்வோம் ஒன்றாக!

**நீங்கள் முக்கியமாகச் சொல்ல வேண்டியது, தமிழ்நாடு அணியா – டெல்லி அணியா என்ற இந்தப் போரில், தமிழ்நாடே – வெல்வோம் ஒன்றாக! இந்தி திணிப்பை எதிர்க்க, “வெல்வோம் ஒன்றாக!” மாநில சுயாட்சியை நிலைநாட்டிட, “வெல்வோம் ஒன்றாக!” மக்கள் நலத் திட்டங்கள் தொடர்ந்திட, “வெல்வோம் ஒன்றாக!” தமிழ்நாடு எப்போதும் அமைதியான மாநிலமாக இருக்க, “வெல்வோம் ஒன்றாக!” தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர, “வெல்வோம் ஒன்றாக!” எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க, “வெல்வோம் ஒன்றாக!” தமிழர் சுயமரியாதை காத்திட, “வெல்வோம் ஒன்றாக!” தமிழ்நாடு தலைகுனியாது என்று காட்டிட, “வெல்வோம் ஒன்றாக!” பாசிச பா.ஜ.க.வை விரட்டிட, “வெல்வோம் ஒன்றாக!” அடிமை அ.தி.மு.க.வுக்கு பாடம் கற்பிக்க, “வெல்வோம் ஒன்றாக!” தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டிட “வெல்வோம் ஒன்றாக!”**